தமிழ்ச் சிட்டு

அம்மா! பிடித்துக் கொள்!

அம்மா! என்னைப்
பிடித்துக் கொள்!
அழகாய் நடப்பேன்
பிடித்துக் கொள்!
சும்மா திரும்பிப்
பார்க்காதே!
சுட்டு விரலை
மடக்காதே!

விரலைப் பிடித்தே
நடந்திடு வேன்!
விரைவாய்க் காலை
வைத்திடுவேன்!
குரலை மட்டும்
தாழ்த்தாதே!
குடுகுடு வென்றே
வருவேன், நான்!

மண்ணில் நடந்தும்
நான்வரு வேன்!
மாடிப் படியும்
ஏறிடுவேன்!
கண்ணில் எனக்கும்
ஒளியுண்டு!
காலில் எனக்கும்
வலிவுண்டு!

கையை வீசி
நடந்திடுவேன்!
கடைக்குக் கூடப்
போய் வருவேன்!
பையைத் தோளில்
மாட்டி விடு!
பழங்கள் மட்டும்
தந்து விடு!

குரல் : 7 இசை : 12 விலை 35 காசு.

கலைஞர்கள்!

சிற்பிகள் :

கருங்கல் லாலும்
களிமண் ணாலும்
கற்பனை யோடெழில் பாவை—பல
கண்ணுக்கும் கருத்துக்கும் தேவை!-இது
கவின்கலைச் சிற்பிகள் பார்வை!-அவர்
கலையுணர் வுள்ளம்,
காட்சியின் வெள்ளம்!
கண்டிட நெஞ்சினை அள்ளும்!

ஓவியர் :

தூரிகை எடுப்பார்;
வண்ணந் தோய்ப்பார்;
சுறுசுறுப் போடே விரைவார்-பல
சித்திர உருவங்கள் வரைவார்!-அதன்
சீரினில் நெஞ்சமும் கரைவார்!-இதன்
சிறப்பினைக் காண்போம்!
செவ்வையைக் காண்போம்!
செறிவுடன் உளத்தால் உண்போம்!

கூத்தர் :

விழியால் விரலால்
விரிபொரு ளுணர்த்தி
வேய்ங்குழல் இசையினுக் காடி-எழில்
விறலியர் தம்மொடு கூடி-கலை
விளைவுகள் எனும்பயன் நாடி-கல்வி
விளையா தார்க்கும்
விளைப்பார் பொருளை
நாடகக் கூத்தர்கள் பாடி!

இசைவாணர் :

குரலால், குழலால்,
முரலும் யாழால்,
குடமொடு முழவால் இசைய-நறுங்
குளிர்தமிழ் உள்ளம் அசைய-அதில்
கூடிடும் இன்பமும் பிசைய-நின்று
கேட்போர் கேட்கக்
கேளார் வேட்கக்
கிளர்ந்திடும் வாணர்கள் இசையே!

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-7. - தி. பி. உ௰௰௫. - மடங் - கன்னி (செப்-அக் 74). - இசை-12.

அறிவுக் குறைபாடு.

இயற்கையாகவே விலங்குகளைவிட மாந்தர்கள் அறிவு விளக்கத்தில் எவ்வளவோ மேம்பாடு எய்தியுள்ளனர். ஆனால் இக்கால் உள்ள மாந்தர் பலரிடமோ அறிவுத்திறன் பலவகையிலும் குறைந்து காணப்படுகிறது. இதற்கு மக்கள் பெருக்கமும் போதிய கல்விப் பயிற்சியின்மையும் ஓரளவு கரணியங்கள் ஆகலாம். மேலும் இக்காலக் கல்வி முறையில் பல குறைபாடுகளும் உள. ஏதோ ஓர் இயந்திரப் பயிற்சிபோல் ஆசிரியர்கள் சில செய்திகளை மாணவர்களின் மனத்துள் புகுத்துவதும், மாணவர்கள் அவற்றை நினைவில் இருத்திக் கொண்டார்களா என்று ஆய்வதுமே இப்பொழுதுள்ள கல்வி முறையின் பெருங் குறிக்கோள்களாக விருக்கின்றன. பழங் காலத்தில் ஒருவர்க்குப் பல துறைகளிலும் அறிவு ஈடுபாடு இருந்தது. இக்காலத்தில் ஒருவர் ஒரு துறையறிவையே செவ்வையாக அறிந்தவராக இருப்பதில்லை. அதற்கு ஒரு துறையைப் பற்றிய செய்திகள் மிகுதியும் வளர்ச்சியுற்றிருக்கின்றன என்பதும் ஒரு கரணியமாகலாம். ஆனால் அதுவே அதற்கு முழுக் கரணியமாகி விடாது.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.

பொதுவாக, இக் கால மக்களிடம் நுண்ணிய கூர்மையான அறிவு விளங்கித் தோன்றவில்லை. ஒருவர் தம்மைப் பற்றியும் தம்மைச் சுற்றியிருப்பவற்றைப் பற்றியும் மிகுவாகத் தெரிந்து கொள்வதில்லை. அல்லது தமக்கோ, தம் ஊருக்கோ தம் நாட்டிற்கோ தேவையானவை பற்றி மிகுதியாக அறிந்திருப்பதில்லை. மாறாக, தமக்குத் தேவையில் லாத செய்திகளை நிறையத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டி ருக்கின்றார். இக்கால மாணவன் ஒருவனிடம் ஒரு நூலின் பெயரைச் சொல்லி 'அதைப்பற்றி உனக்கென்ன தெரியும்?" என்று கேட்போ மானால், அவன் தனக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்ல மனம் ஒப்பாமல், வேறு பலவற்றையும் சொல்லி நம்மைத் திசை திருப்பும் வலக்காரத்தைக் கையாள்வதையே காணலாம்.

இக்கால மாணவச் சிறுவன் ஒருவனிடம் ஏதோ ஒரு பொருளின் பெயரைக்கூறி 'அஃது அந்தக் கடையில் கிடைக்கிறதா' என்று பார்த்து வா என்றால், அவன் சிறிது நேரத்தில் திரும்பி வந்து 'இல்லை' என்று விடைகூறி விடுகிறான். 'பக்கத்துக் கடையில் கேட்டாயா' என்றால் 'இல்லை' என்று கூறிவிட்டு ஓடிப்போய்க் கேட்டு விட்டு மீண்டும் 'இல்லை' என்று திரும்பி வருவான். மீண்டும் 'எதிர்க் கடை யில் கேட்டுப் பார்' என்று கூறியனுப்பினால்தான் எதிர்க்கடைக்குப் போவான். ஒருவேளை நாம் கேட்டு அனுப்பிய பொருள் எங்குமே கிடைக்கவில்லை என்று தெரிந்தபொழுதும் அதற்கிணையான பொருள் என்ன கிடைக்கும் என்று தெரிந்து கொள்ளும் அண்மை விளக்க அறிவும் அவனுக்கிருப்பதில்லை. அப்படிச் சொல்லியனுப்பினால் மட்டுமே அவ்வாறு கேட்டு வரும் 'கிளிப்பிள்ளை' அறிவே இக்காலத்துப் பெரும் பாலான பிள்ளைகளிடம் இருக்கின்றது.

இப்பொழுதுள்ள ஒருவரிடம் 'அறிவில்லை' என்று சொன்னால் அவருக்கு மிகுந்த சினம் வருகின்றது. தம் பெருமைக்கு அஃது ஓர் இழுக்கு என்று கருதி விடுகிறார். தம் அறிவின்மையைச் சுட்டிச் சொல்பவர் யார் என்று தெரிந்தும் அவர் வெட்கப் படுவதில்லை. தம்மை ஏதோ அவர் (அவர் யாராயிருந்தாலும்) குறைத்து மதிப் பிட்டதாகவே கருதுகின்றார். தம்மைக் குறிப்பிடுபவர்தாம் அறிவில் லாதவராக இருக்க வேண்டும் என்றும் கருதி விடுகிறார். கொஞ்சம் துணிவும் மடமையும் உடையவரானால் அவரையே அவ்வாறு திருப்பிக் கூறியும் விடுகிறார். எனவே இப்பொழுதுள்ள மாந்தரிடம் அறி வுணர்ச்சியை விட 'தாம் அறிவாளி' என்று நம்பும் போலியுணர்ச்சி வளர்ந்திருக்கின்றது; அளவுக்கு மீறியும் வளர்ந்திருக்கின்றது என்றும் சொல்லலாம்.

அறிவுக்கு முதல் தகுதி தம் அறியாமையை அறிந்திருப்பதே ஆகும். தாம் ஒன்றைப் பற்றிச் சரிவர அறிந்திருக்கவில்லை என்று உணர்ந்தால்தான், அதைப்பற்றி அறிந்து கொள்ளும் ஒரு வகை வேட்கையுணர்வு நமக்குத் தோன்றும். நாம் அறிந்திருப்பவற்றை எண்ணிப் பெருமைப் படுவதைவிட, அறியாதவற்றை எண்ணி அடக்க முற்றிருப்பதே மிகவும் உயர்ந்த பண்பாகும். பொதுவாக இக்காலத்துள்ளவர்களில் எவரும் தம்மை அறியாதவராகக் கருது வதேயில்லை; எல்லாம் அறிந்தவராகவே தம்மை ஒவ்வொருவரும் கருதிக் கொள்ளுகிறார். 'நமக்குத் தெரியவில்லை' என்பதைப் போல் வெட்கங் கெட்ட செயல் ஒன்றும் இல்லை என்பது எல்லாருடைய கருத்துமாகும். ஆனால் அறிவுக் கூர்மை இன்றுள்ள நூற்றுக்கு எண்பது பெயர்களிடம் இல்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லலாம்.

அரைகுறையாகப் படித்த இன்றுள்ள இளைஞர்கள் பல திரைப் படங்களைப் பார்த்ததையும் அவற்றில் நடித்த திரைநடிகர்கள் பலரைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பதையும், ஒரோவொருகால் அவர்களைப் போல் நடித்துக் காட்டுவதையுமே தமக்குத் தெரிந்த அறிவுச் செய்தி களாகக் கருதி நாள் முழுவதும் அவற்றைப்பற்றிப் பேசியே பொழுதைக் கழித்துப் பெருமை கொள்கின்றனர். அதைப் போலவே, இன்றுள்ள படித்த இளைஞர்களும் தங்களுக்குத் தெரிந்த சில புதினங் களின் பெயர்களையும், அவற்றில் வரும் நிகழ்ச்சிகளையும், அந்நூலா சிரியர்களின் பெயர்களையும் திரும்பத் திரும்பக் கூறிப் பேசிக் கொள்வதையே பேரறிவுச் செயல்களாகக் கருதிக் கொள்கின்றனர். இவ்விரு திறத்தார்களின் நிலையும் பெரிதும் இரங்கத் தக்கதாகும். இவர்களின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று அஞ்ச வேண்டி யுள்ளது.

அறிவியல் பெரிதும் வளர்ந்துள்ளதாகக் கூறப்படும் இந்நாளில் மாந்தனின் தனிப்பட்ட உள்ளுணர்வும் நுண்ணறிவும் சாம்பி வருவதைக் கண்டு அறிவுலகம் பெரிதும் வருத்தமடைந்துள்ளது. எந்தத் துறையிலும் பழங்காலப் பெரியோர்களை ஒத்த அறிவுடை யவர்களை இந்நாளில் காண்பது அரிதினும் அரிதாகப் போய்விட்டது. ஒரு திருவள்ளுவரையோ, ஒரு கம்பனையோ, ஒரு சேக்சுபியரையோ, ஓர் எடிசனையோ, ஒரு தார்வினையோ இனிக் காண முடியாமல் போகுமோ என்று ஏங்க வேண்டியுள்ளது. அத்தகைய அறிவு முடக் கத்தின் பயனாக இவ்வுலகத்திற்கு ஒரு தீய எதிர்காலம் காத்திருக்கிறது.

—பெருஞ்சித்திரன்.



கட்டி இழுத்துவரச்
சொன்னவொரு கட்டளையைக்
கிட்ட நின்று பெண்கழுதை
கேட்டவுடன், தன் நண்பன்
காளையைத்தான் குள்ள நரி
கண்டிருக்க வேண்டும்; ஒரு
வேளை யதுவாய்
இருந்துவிட்டால், வீண்வம்பு;
வல்லரிமா அவ்வுயிரை
வாங்காமல் போகாது;

“நல்லபடி நாம்காக்க
வேண்டு”மென நற்கழுதை
எண்ணித் துணிந்துடனே,
“எம்மரசே! இக்களிற்றின்
கண்ணிலது பட்டால்
கவனமொடு பார்த்தழைத்துக்
கொண்டுவரச் சொல்லுங்கள்!
குற்றத்தை நன்காய்ந்து,
தண்டனையை நாமே
தரவேண்டும்” என்றுசொல்ல,

“ஆமாமாம்! என்றே
அரிமாவும் அஃதுரைத்துப்
போமாறு கூறக்
களிறிசைந்து போனதுவாம்!

o o o

வெங்களிறு போனவுடன்
வெள்ளிமூக் குக்கழுதை
தன்கதையை மீண்டும்
தனித்து நினைவூட்டிக்
காட்டரசன் தன்பால்
கனிவாய் எடுத்துரைக்க
மாட்டைக் கொணர்தற்கு
மற்றுமிரு யானைகளைக்
காட்டரசன் உய்த்ததுவாம்!
அந்தக் களிறுகளும்
காட்டை அலசுதற்குக்
காற்றுய்ப் பறந்தனவே!
பின்னர் விலங்கரசன்
பேரவையை ஒத்திவைத்தான்!
மன்னன் எழுந்தவுடன்
மற்ற விலங்குகளும்
தந்தம் இருப்பிடத்தைத்
தாமடைந்த! பெண்கழுதை
சொந்த மகள் நினைவு
உள்ளம் சுரந்தெழவே,
"எங்கே இருப்பாளோ?
என்னதுயர் பட்டாளோ?
இங்கேநான் வந்ததனை
எவ்வா றறிவாளோ?
காளைவர நேர்ந்ததுபோல்
காணக் கிடைப்பாளோ?
காளைமா டாங்கொருகால்
கண்டழைத்து வந்திடுமோ?
ஏதுக்கும் மாடுவந்தால்
எல்லாம் விளங்கும்"—எனத்
தீதுக்கும் நன்றுக்கும்
எண்ணம் திரிந்தலைய
வல்லரிமா தன்புழைக்கு
வால்பற்றிப் பின்சென்று,
கல்லொன் றணையாகக்
கால்மடக்கி ஓய்ந்ததுவே!

(தொடரும்

சிறுகதை:

எனக்கு நன்ருய் நினைவில் இருக்கிறது!

—இரசூல் கம்சதோவ்.

நான் சிறு பையனுக இருந்தபோது ஒருநாள் என் தந்தை என்னை நன்ருக உதைத்தார். அவர் அடித்த அடி எனக்கு என்றே மறந்து விட்டது. ஆனுல், அதற்கான காரணம் இன்னும் என் நெஞ்சை விட்டு அகலவில்லை.

அன்று காலை எப்போதும்போல் பள்ளிக்கூடத்திற்குக் கிளம்பினேன். ஆனுல் நான் சென்றது பள்ளிக்கூடத்திற்கு அன்று. வீட்டைக் கடந்ததுமே ஒரு சந்தில் நுழைந்தேன். பிறகு அதிலிருந்து மற்ருெரு தெரு வழியாகச் சென்றேன். அங்குத் தெருப்பிள்ளைகள் கோலி ஆடிக் கொண்டிருந்தார்கள். நானும் அவர்களுடன் சாயுங் காலம் வரை ஆடினேன். காலையில் புத்தகம் வாங்க அப்பா எனக்குப் பணம் கொடுத்தார். அப்பணத்தை வைத்து, உலகத்தையே மறந்து விளையாடினேன். ஆனுல், அந்தப் பணம் விரைவிலேயே தீர்ந்து விட்டது. பணத்திற்கு என்ன செய்வது என்று எண்ணினேன். என்னேடு விளையாடிய பிள்ளைகளிடம் கேட்டேன். எல்லாரும் மறுத்து விட்டனர். எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. எங்கள் குடி யிருப்பில் உள்ள எல்லா வீடுகளுக்கும் சென்றேன். "நாளைக்கு எங்கள் வீட்டுக்கு விருந்தினர் வருகிருர்கள். அதற்காக எங்கள் வீட்டில் பணம் வாங்கிக் கொண்டு வரச் சொன்னுர்கள்" என்று கூறினேன். நிறையப் பணம் கிடைத்தது. அப்படியும் அப்பணத்தில் சில நேரமே விளையாட முடிந்தது. தவிர, விளையாடும் போது அடிக்கடி முட்டி போட்டு ஆடியதால் கால்சட்டை தேய்ந்து கிழியத் தொடங்கியது. முட்டி முழுவதும் ஒரே சிராய்ப்பு.

இந்தக் கோலத்தோடு அப்பாவின் வழக்கு மன்றத்தில் தோன்றி னேன். தலை முதல் கால் வரை என்னை நோட்டமிட்டார் தந்தை. என் கால்கள் தாமாக நடுங்கின. நான் தலையை உயர்த்தவே இல்லை. எனது முட்டியில் உள்ள வீக்கம், கால்சட்டைக் கிழிசல் வழியாகத் துருத்திக் கொண்டு வெளியே தெரிந்தது.

"இது என்ன?" இயல்பாகக் கேட்டார் என் தந்தை. கைகளால் முட்டியை மூடிக் கொண்டே, "அதுவா, முட்டி" என்றேன்.

"முட்டி, முட்டிதான் தெரியுமே....அது ஏன் துருத்திக் கொண்டு வெளியே தெரிகிறது? எப்படி அதைக் கிழித்தாய் சொல்? "....

கால்சட்டை கிழிந்தது எனக்கே தெரியாததுபோல் நடித்துக் கிழிசல்களை வியப்புடன் இப்படியும் அப்படியும் பார்த்தேன். பொய் கூறிவிட்டு அஞ்சுபவர்களின் மனநிலை வியப்பானது; பெரியவர்கள் அனைத்தையும் அறிவர்; தப்பை மறுப்பது வீண்; மேலும் வெட்கக் கேடு என்று நன்றாகத் தெரிந்திருந்த போதிலும், இறுதிவரை அவற்றை ஒப்புக் கொள்ளாமல், உண்மையைக் கூறாமல், எதை எதையோ கதை விடுகிறோம்!

தந்தையின் குரல் உயரத் தொடங்கியது. தந்தையின் குணத்தை உணர்ந்த அனைவரும் எனக்கு உதவி செய்ய ஓடி வந்தனர். அவர்கள் அனைவரையும் ஒதுக்கித் தள்ளினார் தந்தை. கேள்வியைத் தொடர்ந்தார்.

"உம். எப்படிக் கால்சட்டைக் கிழிந்தது? சொல்."

"பள்ளிக்கூடத்தில் ஆணியில் மாட்டிக் கொண்டு விட்டது."

"எப்படி... எப்படி?"

"ஆணி... ஆணி மாட்டி...."

"எங்கே?"

"பள்ளியில்"

"எப்பொழுது?"

"இன்று".

அப்பா 'பளார்' என்று என் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

"இப்பொழுது சொல். கால்சட்டை எப்படிக் கிழிந்தது?"

நான் பேசாமல் இருந்தேன். மற்றொரு கன்னத்தில் மறுபடியும் அறை விழுந்தது.

"இப்பொழுதாவது சொல்."

நான் தேம்பி அழத் தொடங்கினேன்.

"மூடு வாயை" என்ற அவர் சாட்டையை வேறு கையில் எடுத்துக் கொண்டார். சட்டென்று நான் அழுகையை நிறுத்தி விட்டேன்.

"நடந்ததைக் கூறாவிட்டால் சாட்டையால் நல்ல அடி விழும்."

சாட்டை என்பது என்ன என்பதை நன்கறிவேன், உண்மையைக் கூடச் சொல்லி விடலாம்; ஆனால் இந்த சாட்டை அதைவிடக்

கொடுமையானது. எனவே நடந்தது அனைத்தையும் தொடக்கம் முதல் முடிவு வரை ஒன்றுகூட விடாமல் கூறி விட்டேன்; வழக்கு மன்றம் முடிவுற்றது. இரண்டு நாள்கள் செத்த பிணமாக நடமாடினேன். வீட்டிலும், பள்ளியிலும் வாழ்க்கை வழக்கம்போல் நடந்தது. ஆனால் எனக்கு மட்டும் மனமே சரியில்லை. அப்பாவோடு பேச வேண்டும்போல் எனக்குத் தோன்றியது. நெஞ்சு கனத்தது. தந்தையிடம் பேச வாய்ப்பை எதிர் நோக்கினேன். ஆனால் அப்பா என்னிடம் பேச விரும்பவில்லை என்பதை அறிந்த என் உள்ளம் படாத பாடு பட்டது. துயரம் தாங்க முடியவில்லை.

மூன்றாவது நாள் அப்பா என்னை அழைப்பதாகச் சொன்னார்கள். அப்பா என்னைத் தம் அருகில் உட்கார வைத்தார். என் தலையைத் தடவினார். இப்போது பள்ளியில் எந்தப் பாடம் நடைபெறுகிறது; எவ்வளவு மதிப்பெண்கள் வாங்கினாய் என்று அப்பா கேட்டார். பிறகு திடீர் என்று எதிர்பாராதவாறு இதனைக் கேட்டார்.

"நான் உன்னை எதற்காக அடித்தேன் தெரியுமா?"

"தெரியும்".

"எதற்காக?"

"நான் பணம் வைத்துக் கோலி ஆடியதற்காக......."

"இல்லை, அதற்காக இல்லை."

"அப்படியானால், நான் கால்சட்டையைக் கிழித்துக் கொண்டதற்காக......"

"ஊகூம்; கால்சட்டைக்காக இல்லை."

"நான் பள்ளிக்கூடம் போகாததற்காக."

"ஆம்; அஃது ஒரு பெரிய தவறு; இதிலிருந்துதான், உன் அன்றைய மற்ற தவறுகள் எல்லாம் தொடங்கின. அதனால் மற்ற தவறுகளுக்காகவும் தண்டிக்க வேண்டி வந்தது. என் மகனே! நான் உன்னைப் பொய் பேசியதற்காக அடித்தேன். பொய்-அது 'தவறு' இல்லை; (திருத்திக் கொள்வதற்கு) எதிர்பாராத நிகழ்ச்சி இல்லை; (தெரியாமல் போவதற்கு) அது மாந்தக் குணத்தின் ஓர் உறுப்பு. நிலைத்துவிடக் கூடியது. உன் மனம் என்னும் வயலில் வளரும் களை அது. எனவே, அதனை வேரோடு பிடுங்கி எறியாவிட்டால், அது

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம் பார்க்க.)

சுழியம் (Zero)

—நா. எழில்-மகிழ்நன்.

குழந்தைகளே,

வணக்கம். சுழியம் என்பது ஓர் எண்ணு? அதன் மதிப்பென்ன? அதைக் கணக்கில் பயன்படுத்தும் முறை எவ்வாறு? என்ற வினுக்கட்கான விடைகளை நீங்கள் தவருது தெரிந்து கொள்ள வேண்டும்.

சுழியம் மதிப்புள்ள ஓர் எண்ணே. இதற்கு ஓர் எடுத்துக் காட்டுக் கூறினுல் உங்கட்கு எளிதில் விளங்கும். உங்கள் வகுப்பில் ஒரு மாணவன் கணக்கில் சுழியம் வரையம் (Mark) பெற்றுள்ளான். அவனுடைய வரையம் கணக்கில் என்னவென்று கேட்டால் சுழியம் என்றுதான் அவன் சொல்வானே தவிர, வரையம் எதுவுமில்லை என்று கூறுவதில்லை. ஆகவே, இக்கூற்றிலிருந்து சுழியத்திற்கு மதிப்புண்டு என்று தெளியலாம். மேலும் ஐந்திலிருந்து ஒவ்வொன்ருக இறக்கிச் சொன்னுல், 5, 4, 3, 2, 1, 0 ஆகும். ஒன்றிற்குப் பிறகு சுழியம் என்றே கூறுவோம். ஒன்றிற்குப் பிறகு எண் இல்லையென்று கூறுவதில்லை.

இனி, கூட்டல், கழித்தலில் சுழியத்தின் பண்பினைக் காண்பேம். ஓர் எண்ணுடன் சுழியத்தைக் கூட்டினுலோ அல்லது கழித்தாலோ அவ்வெண்ணே வரும். $7+0=7$, $15-0=15$ ஆகும். இங்கு சுழியம் தன் வெறுமை நிலையை வெளிப்படுத்துவதில்லை.

ஆனுல், பெருக்கலில் சுழியம் தன் வெறுமை நிலையைத் தன்னுடன் தொடர்பிற்காக வருகின்ற எண்ணுடன் ஒன்றித் தன்னையே வெளிக்காட்டி நிற்கின்றது. இதனைப் பின்வரும் எடுத்துக் காட்டுகளால் ஒருவாறு விளங்கிக் கொள்ளலாம். $5\times4=20$; $4\times4=16$; $3\times4=12$; $2\times4=8$; $1\times4=4$; $0\times4=0$.

இத் தொடர் பெருக்கற்பலனில் 20, 16, 12, 8, 4, 0 என்ற எண்களை நோக்குங்கள். இவ்வரிசை நான்காகக் குறைக்கப்பட்டிருப்பதைக் காண்க. அவ்வாறு குறைத்துக் கொண்டே வரும்போது நான்கிற்குப் பிறகு சுழியந்தான் வரவேண்டும்.

அடுத்து, சுழியத்தின் வகுத்தல் பண்பினைப் பார்ப்போம். சுழியத்தை எந்தவோர் எண்ணுல் வகுத்தாலும் கிடைக்கும் ஈவு சுழியமேயாகும். இதனைப் பங்கீட்டு முறையில் எளிதில் விளங்கிக் கொள்ளலாம். சுழியம் என்கின்ற வெறுமையைத் தொண்ம (ஒன்பதின்மர்) ருக்குப் பங்கிட்டுக் கொடுத்தால் ஒவ்வொருவருக்கும் பங்கு சுழியந்தான் வரும் $0\div9=0$ ஆகும். – (தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க)

"தெரிந்து கொள்ளுங்கள்"

—நா. மதிவாணன்.

0. முதன் முதல் அணுகுண்டு போடப்பட்ட இடம்:
கிரோசுகிமா (Hiroshima)
வெடிக்கப்பட்ட நாள்—5-8-1945.
இரண்டாம் முறையாக அணுகுண்டு போடப்பட்ட இடம்:
நாகசாகி (Nagasaki)
வெடிக்கப்பட்ட நாள்—9-8-1945.

ஆற்றின் கரைகளில் அழகுப் பட்டினங்கள்.

—நா. மதிவாணன்

1. பாரிசு—சீன்
2. இலண்டன்—தேம்சு
3. நியூயார்க்—கட்சன்
4. உரோம்—தைபர்
5. வாயன்னு—டான்யூப்
6. வாசிங்டன்—போலாமாக் (Polomac)
7. இரங்கூன்—ஐராவதி
8. மாசுகோ—மாசுகவா (Moskva)
9. கெய்ரோ—நைல்
10. பெர்லின்—சுபிரீ (Spree)
11. தில்லி—யமுனை
12. கராச்சி—சிந்து

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஓர் எண்ணைச் சுழியத்தால் வகுப்பதென்பது பொருளற்றதாகும். $8 \div 0 = 8$ ஆகும். அதாவது உருபா எட்டை சுழியம் பேருக்குப் பங்கிட்டுக் கொடுத்தால், அத்தொகை அப்படியே தான் இருக்கும்.

இதுவரை நீங்கள் சுழியத்தைப் பற்றியும் அதைக் கணக்கில் பயன்படுத்தும் முறை பற்றியும் ஓரளவு அறிந்து கொண்டிருப்பீர்கள். உங்கள் கணக்கில் சுழியத்திலிருந்து ஓர் எண்ணை அல்லது ஓர் எண்ணிலிருந்து சுழியத்தைக் கூட்ட, கழிக்க, பெருக்க அல்லது வகுக்க நேர்ந்தால் பிழை செய்ய மாட்டீர்கள் என்பது உறுதி. O

நீங்கள் கணக்கில் கெட்டிக்காரரா? அவ்வாருனுல் இப்புதிர்களை உடனே விடுவியுங்கள் பார்க்கலாம்...!

குறிப்பு: ஒவ்வொரு புதிரையும் விடுவிக்க ஒரு நிமையத்திற்கு மேல் நீங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது அதற்குப் பின் விடை சொல்ல முயற்சி செய்வது உங்கள் கணக்குத் திறமையைக் காட்டுவ தாகாது. எனவே, விடையைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

1. இரு தொடர்ந்த எண்களின் கூடுதல் அதனைத் தொடர்ந்த மூன்றும் எண் ஆகும். அப்படியானுல் அந்தத் தொடர் எண்கள் எவை?

2. ஓர் எண்ணை அதே எண்ணுல் பெருக்கி வரும் பெருக்குத் தொகை, அந்த எண்ணுடன் அதே எண்ணைக் கூட்டிவரும் கூட்டுத் தொகைக்குச் சமம். அந்த எண் எது?

3. ஒரு செவ்வகத்தின் (நீள் சதுரத்தின்) நீள அகலங்கள் இரண்டும் ஒற்றைப்படை எண்கள். அச் செவ்வகத்தின் பரப்பளவும், சுற்றளவும் இரண்டு தொடர் எண்களாகும். ஆனுல் பரப்பள வைக் குறிக்கும் எண்ணை விடச் சுற்றளவைக் குறிக்கும் எண் பெரியது. அவ்வாருனுல் செவ்வகத்தின் நீள அகலங்கள் என்ன?

4. மேற்குறித்த அதே போன்ற செவ்வகத்தில் பரப்பளவெண் சுற்றளவெண்ணை விடச் சிறியதாக இருக்குமானுல் செவ்வகத் தின் நீள அகலங்கள் என்ன?

5. நான்கு தொடர்ந்த எண்களின் கூடுதல், அத் தொடர்ந்த எண்களை அடுத்து வரும் எண்ணைப்போல் இரு மடங்காகும். அந்நான்கு எண்கள் எவை?

(விடை: 12-ஆம் பக்கம் பார்க்க)

ப ஆறுமுகம். வத்தக்கவுண்டன் வலசு.

கல்வி.

0 எண்ணுமல் கற்பது மனத்தில் குழப்பத்தைத் தோற்றுவிக்கும்; கற்காமல் எண்ணுவது மனத்தின் சமநிலையை கெடுத்துவிடக் கூடியது. —கன்பூசியசு.

0 கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் இடையே, உயிருள்ளவற்றிற்கும் உயிரில்லாதவற்றிற்தும் இடையே உள்ள அத்துணை வேறுபாடு உண்டு. —அரிசுடாட்டில்.

0 வாழ்க்கையில் நாம் முன்னேற முன்னேற நம் திறமைகளின் வரம்புகளைக் கற்றுக் கொள்கிறோம். —பிராய்டு.

0 பட்டறிவுதான் சிறந்த பள்ளிக்கூடம்; முட்டாள்கள் வேறெதிலும் கற்றுக்கொள்ள மாட்டார்கள். —பிராங்ளின்.

0 கற்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே நல்லது; ஏனெனில் அறியாமைதான் தீயூழின் மூலவேர். —பிளேட்டோ

0 இந்த உலகில் மிகவும் புரட்சியானது எஃது என்றால், அதுதான் கல்வி. ஓர் எழுத்தைக் கற்றுத் தருவது ஒரு புரட்சிக்கு வித்திடுவதாகும். —இங்கர்சால்.

0 பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், கற்றுக் கொடுப்பவை கல்வியன்று, கல்விக்குரிய அடிப்படைகளே! —எமர்சன்

0 கல்வி செய்யுட் கோவையுடன் தொடங்குகிறது; தக்க நல்லொழுக்கத்தினால் ஊற்றமடைகிறது; இசைப் பயிற்சியினால் நிறைவு பெறுகிறது. —கன்பூசியசு.

0 ஒரு நாட்டின் வேறுபட்ட இயல்புடைய மக்களை ஒருமைப்படுத்துவதற்கு ஏற்ற முறைதான் கல்வி என்னும் கருவி. —அரிசுடாட்டில்.

0 செல்வர் முன் வறியவர் நிற்பதுபோல் கற்றவர் முன் ஏங்கித் தாழ்ந்து நின்று கல்வி கற்றவரே உயர்ந்தவர்; கல்லாதவர் என்றும் இழிந்தவரே. திருவள்ளுவர்.

(தொகுப்பு : ப. ஆறுமுகம், வத்தக்கவுண்டன் வலசு.)

(11-ஆம் பக்க விடை)

1) 1, 2 $(1+2=3)$
2) 2 $(2\times 2=4;\ 2+2=4)$
3) 5, 3 $(5\times 15;\ 5+3+5+3=16)$
4) 7, 3 $(7\times 3=21;\ 7+3+7+3=20)$
5) $1+2+3+4=10$ $(5\times 2=10)$.

பாவாணரின் ஆய்வுகளில் ஒரு சில.

—தொகுத்தோன் : **நா. எழில்-மகிழ்நன்**

1. மாதம் என்பது தென் சொல்லே. மதி = திங்கள். மதி-மாதம்-வ-மாஸ. திங்களைக் குறிக்கும் மதி என்னுஞ் சொல் வடமொழியில் இல்லை.

   ஒப்பு நோக்க: moon-month.

2. எருமைக்கு வடமொழியில் மகிசம் (மஹிஷ) என்று பெயர். அதனால் எருமையூர் என்பதைப் பிராமணர் மகிசபுரி என மொழி பெயர்த்தனர். அச்சொல் அதன் ஆங்கில வடிவை யொட்டி இன்று மைசூர் என வழங்குகிறது.

3. உயிரும் மெய்யும் கூடியது உயிர்மெய் எனக் கூறுவது பொருந்தாது. இக்கூற்று உயிர்மெய் என்னுஞ் சொல் உலக வழக்கற்ற பின் எழுந்தது. பிராணனையுடையது பிராணி என்பது போல, உயிரையுடைய மெய் உயிர்மெய் (அ) உயிரி என்பதே பொருத்தமாம்.

4. 'செல்வோம்' என்று சொல்வது செல்வம் என்றும், கையை விட்டுச் செல்வது செல்வமென்றும் சிலர் பொருட் காரணம் கூறுவது பொருந்தாது. செல்லும் மதிப்புள்ளதே செல்வம். 'இக்காசு செல்லுமா? செல்லாதா? என்னும் வழக்கை நோக்குக.

5. தேயு அல்லது தெய்வு (தெய்வம்) என்னும் தென்சொல் தியூ அல்லது 'த்யு' என்றும், தேவு என்னும் தென்சொல் திவ் என்றும் ஆரியத்தில் திரிந்துள்ளன.

   எ-டு. L. deus, divus, divinus.

6. ஆராய் என்பது ஆய் என்பதன் மிகுப்பு (Intersive). ஆர (நிரம்ப) + ஆய் = ஆராய்.

7. இலக்கம், கோடி என்னும் பெயர்கள் முறையே பெரிய இலக்கம், கடைசி எண் என்று பொருள்படும் தனித்தமிழ்ச் சொற்களே.

8. வடமொழியாளர் தீவம் என்னுந் தென்சொல்லைத் 'தீவீப' என்று திரித்து, இருபுறமும் நீரால் சூழப்பட்டது எனப் பொருட் கரணியங் கூறுவர். தீவு என்பது நாற்புறமும் நீரால் சூழப்பட்ட நிலப்பகுதியே.

9. நாகம் என்பதே பாம்பின் பொதுப் பெயர். நகர்வது நாகம்.

   ஒ. நோ. OE. Snakan = to creep; Snak-Snake.

பள்ளித் தொடர்பான தனித்தமிழ்ச் சொற்கள்:

அலுவலகத் தொடர்பானவை

Register of admissions and withdrawals-சேர்ப்பு நீக்கப் பதிவேடு
Register of attendence for Masters-ஆசிரியர் வருகைப் பதிவேடு
Register of attendence for pupils-மாணவர் வருகைப் பதிவேடு
Term fee Register-தவணைக் கட்டணப் பதிவேடு
Daily fee collection Register-நாட்சரிக் கட்டணத் தண்டற் பதிவேடு.
Library Register-நூலகப் பதிவேடு
Punishment Register-தண்டப் பதிவேடு
Log book-பெரும் பதிவேடு (அ) தடிப் பொத்தகம்
Cash book-காசுக் கணக்கேடு
Acquittance Roll-சம்பளப் பட்டி
Pay bill-சம்பளங் கொடுப்புப் பட்டி
Supplimentary Pay bill-நிரப்பியற் சம்பளப் பட்டி
Arrear bill-நிலுவைப் பட்டி
Basic Pay-அடிப்படைச் சம்பளம்
Dearness Allowance-அருந்தல் படி
Travelling Allowance-வழிப் போக்குப் படி
City compensatory Allowance-மாநகர் இழப்பீட்டுப் படி
Providement fund-எய்ப்பில் வைப்பு
Memo (or) Memorandom-நினைவுக் குறிப்பு (அ) வேண்டலறிவிப்பு (அ) மொட்டை மடல்
Notice-அறிவிப்பு
Report-அறிக்கை
Long term-நெடுந்தவணை
Short term-குறுந்தவணை
Casual Leave-நேர்ச்சி விடுப்பு
Religious Leave-மதவியல் விடுப்பு
On Duty-வேலை மேல் (அ) பணிநிலை
Permanent-நிலையானது

Temporary-நிலையற்றது
Approved Probationer-ஒப்புக் கொள்ளபட்டப் பழகுநர்
Probationer-பழகுநர்

வைப்புகள் (funds)

Savings bank account-மீத்த வைப்பகக் கணக்கு
Amenity fee fund-ஏந்துக் கட்டண வைப்பு
Audio visual Education fee fund-கேட்புக் காட்சிக் கல்விக் கட்டண வைப்பு
Excursion fee fund-புறப் போக்குக் கட்டண வைப்பு
Games fee fund-விளையாட்டுக் கட்டண வைப்பு
Hobbies and Craft fee fund-பற்றுட்டுக் கைத்தொழில் கட்டண வைப்பு
Library fee fund-நூலகக் கட்டண வைப்பு
Literary fee fund-இலக்கியக் கட்டண வைப்பு
Stationery fee fund-ஏழுது கருவிக் கட்டண வைப்பு

தேர்வுத் தொடர்பானவை

Quarterly Examination-காலாண்டுத் தேர்வு
Half-yearly ,, -அரையாண்டுத் தேர்வு
Annual ,, -ஆட்டைத் தேர்வு
Written ,, -எழுத்துத் தேர்வு
Practical ,, -செயன்முறைத் தேர்வு
Entrance ,, -புகவுத் தேர்வு
Oral ,, -வாய்மொழித் தேர்வு
Mark list-மதிப்பெண் பட்டியல்
Maximum-பேரெல்லை
Minimum-சிற்றெல்லை
Progress Report-தேர்ச்சி அறிக்கை
Promotion-உயர்த்தம்
Detention-நிறுத்தி வைப்பு
Good-நன்று
Fair-கொஞ்சம் நன்று

சான்றிதழ்கள்

Conduct certificate-நடத்தைச் சான்றிதழ்
Health certificate-உடல் நலச் சான்றிதழ்
Income certificate-வருமானச் சான்றிதழ்

Leaving Certificate-விலகல் சான்றிதழ்
Transfer ,, -இடமாற்றச் சான்றிதழ்
Service ,, -ஊழியச் சான்றிதழ்
Joining Report-சேர்க்கை யறிக்கை

பொதுவானவை

Primary Education-முதன் முறைக் கல்வி
Secondary Education-வழி முறைக் கல்வி
Higher Education-மேனிலைக் கல்வி
S. S. L. C.-வழிமுறைக் கல்வித் தகுதியேடு (அ) பள்ளியிறுதித் தகுதியேடு
P. U. C.-பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு
B. A.-க. இ. (கலையிளைஞர்)
M. A.-க. மு. (கலை முதுவர்)
B. Sc.-அறி. இ. (அறிவியல் இளைஞர்)
M. Sc.-அறி. மு. (அறிவியல் முதுவர்)
B. O. L.-கீ.- இ. (கீழைக்கலை இளைஞர்)
M. O. L.-கீ. மு. (கீழைக்கலை முதுவர்)
B. E.-பொறி. இ. (பொறியியல் இளைஞர்)
M. E. பொறி. மு. (பொறியியல் முதுவர்)
B. Ed.-கல். இ. (கல்வி இளைஞர்)
M. Ed.-கல். மு. (கல்வி முதுவர்)
B. T.-ப. இ. (பயிற்சி இளைஞர்)
L. T.-ப. உ. (பயிற்சி யுரிமையர்)
B. A. (Hons)-க. இ. (சிறப்பு)
B.Sc. (Hons)-அறி. இ. (சிறப்பு)
Teaching Staff-கற்பிப்புப் பணிக்குழு
Non teaching Staff-கற்பியாப் பணிக்குழு
B. T. Assistant-பயிற்சியுரிமை உதவியாளர்
Graduate Assistant-பட்டந்தாங்கி உதவியாளர்
Tamil Pandit-Grade I-முதற்றரத் தமிழ்ப் புலவர்
Secondary Grade Asst-வழிநிலைத் தர உதவியாளர்
Higher Grade Assistant-மேல் தர உதவியாளர்
Craft instructor-கைத்தொழில் பயிற்றுசிரியர்
Engineering ,, -பொறியியல் பயிற்றுசிரியர்
Agricultural ,, -பயிர்த் தொழில் பயிற்றுசிரியர்
Commercial ,, -வணிகப் பாடப் பயிற்றுசிரியர்
Deputy Inspector of Schools-பள்ளித் துணை உண்ணோட்டகர்.

தொகுப்பும், பெயர்ப்பும்: **நா. எழில், மகிழ்நன்.**

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ந்து நல்ல உள்ளம் என்ற பயிரை அழித்து விடும். உலகில் பொய்யை விடக் கொடுமையானது எதுவும் இல்லை. மறுபடியும் எப்போதாவது பொய் சொன்னால் உன்னைக் கொன்று விடுவேன். தெரியுமா? இந்த நிமையத்திலிருந்து நீ உண்மையேதான் பேச வேண்டும். தூவல் என்றால் தூவல் என்றும், பலகை என்றால் பலகை என்றும், மரம் என்றால் மரம் என்றும்தான் கூற வேண்டும். விளங்கு கிறதா?

"விளங்குகிறது"

"சரி. நீ போ." இனிமேல் பொய்யே பேசக் கூடாது என்று எனக்கு நானே மனத்திற்குள் சூள் உரைத்துக் கொண்டே அவ் விடத்தை விட்டு அகன்றேன். தவிர, என் தந்தை ஏதாவது சொன்னால் எப்படியும் செய்து காட்டுவார். எனவே கொலை நடந் தாலும் நடக்கலாம் என்று அஞ்சினேன்.

பல ஆண்டுகள் கடந்த பின் இந்த நிகழ்ச்சியை என் நண்பர் ஒருவரிடம் நான் கூறினேன்.

"அப்படியா? அந்தச் சிறிய பொய்யை, இன்னுமா நீ மறக்க வில்லை" என்றார், அவர்.

"பொய் என்றால் பொய்தான். மெய் என்றால் மெய்தான். அவை பெரியதாகவோ சிறியதாகவோ இருக்க முடியாது. வாழ்க்கையும் உண்டு; இறப்பும் உண்டு. இறப்பு எப்போது ஏற்பட்டு விட்டதோ, அப்போது வாழ்க்கை இல்லை; அதே போல் வாழ்க்கை நடக்கும் வரை இறப்பு வருவது இல்லை. அவை இரண்டும் ஒரே பொழுதில் இருக்க முடியாது. ஒன்று மற்றதை ஏற்பது போல் இல்லை. அதுபோல்தான் பொய்யும் மெய்யும்."

"பொய்–தூய்மையில்லாதது. அருவருப்பானது. மெய்–மகிழ்ச்சி தருவது; ஒளிவீசக் கூடியது; கலங்கமில்லாத வானம். பொய்–கோழைத்தனம். மெய்–ஆண்மை. இதுவோ, அதுவோ ஒன்றுதான் இருக்க முடியும். இதற்கிடையே எதுவும் இருக்க முடியாது" என்றேன் நான்.

(நன்றி : சோவியத்துச் செய்தியில் வெளிவந்தது.)

ஈசாப் கதை.

—இளந்தமிழன்.

கிழவன் ஒருவன் மணல் மேல் உட்கார்ந்து கொண்டு அலைகள் வந்து அடித்துச் சிதறிப் போவதை ஒன்று, இரண்டு, மூன்று என்று கணக்கு எண்ணிக் கொண்டிருந்தான். கவனமாக எண்ணிக் கொண்டிருந்த அவனுக்கு ஏனோ இடையில் கணக்குத் தவறிப் போயிற்று.

"ஐயோ! கெட்டுப் போயிற்றே, நான் என் செய்வேன்?'' என்று கதறி அழுதான்.

அங்கே ஒரு காக்கை இந்த இரக்கத்தைப் பார்த்து மெள்ள வந்து அவன் காதில் சொல்லிற்று.

"கிழவா! ஏன் கவலைப்படுகிறாய்? வேண்டா"? கழிந்து போனது போகட்டும், மறுபடியும் எண்ண தொடங்கலாமே. வீணாகத் துயரப் பட வேண்டா. இப்போது வரும் அலைகளிலிருந்து எண்ணிக் கொண்டு போ!'' என்று சொல்லிவிட்டுப் பறந்து போனது.

நடந்து முடிந்ததைப் பற்றிக் கவலைப்படாதே—

இனி நடக்க இருப்பதைக் குறித்து நீ மகிழ்ச்சியாயிரு.

பொன் மொழிகள்.

0 பணத்துக்கு நீ தலைவனாக இருந்தால் அதை நல்ல செயல்களுக்குப் பயன்படுத்துவாய். அதற்கு நீ அடிமையாக இருந்தால் அஃது உன்னைத் தீய செயல்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும்.

—ஆப்பிரிக்கப் பாதிரியா

0 படிக்க அறியாதவனைப் போன்றே படிக்கக் கூடாதவற்றைப் படிப்பவனும் அறியாதவனாகின்றான். —தோரோ.

0 மொழி உயிரோடிருக்கும் வரை குமுகாயம் உயிரோடிருக்கும்.

—செக் பழமொழி.

0 உண்மைக்காக எதையும் இழக்க அணியமாக இருங்கள். ஆனால் எதற்காகவும் உண்மையை இழக்காதீர்கள். —காந்தி.

தொகுப்பு: இராம. சுப. நாராயணன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. தமிழகம்.